திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மதிப்பீட்டுத்தொகை இன்னும் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இதைப் பல ஆண்டுகளாக சர்வே செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை மிக விரைவிலே எடுப்பதற்கும், இதிலே எத்தனை கிராமங்கள் பயன் அடைகின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வழியோரக் கிராமங்கள் என்று இருக்கின்றனவே தவிர, எத்தனை கிராமங்கள் என்று தெரியவில்லை. வழியோர ஊராட்சிகட்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனளிக்கும் வண்ணம் வரையப்பட்டுள்ளது. கோசனம் மற்றும் தாழ்குனி ஊராட்சிகள் மேற்கண்ட திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. உத்தேச பிரதான குழாய் அமையும் இடத்திற்கு மிக தொலைவில் உள்ளதால் தற்சமயம் ஆய்வில் இருக்கும் நம்பியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கூட இவ்விரு குடியிருப்புகளும் சேர்க்கப்படவில்லை. ஆனால் கோசனம் ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுப்பாளையம் குடியிருப்பு மட்டும் இத்திட்டத்தில் பயன்பெற வகைசெய்யப்பட்டு உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே திட்டம் பற்றி ஆளும் கட்சி உறுப்பினரும் எதிர்க்கட்சி உறுப்பினரும் மாற்றி மாற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே மூன்றாவது முறையாக—முதல் முறை ஆய்வில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் என்றும், இரண்டாம் முறை ஆய்வில் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் என்றும் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாகச் சொல்கிறபோது $9\frac{1}{2}$ கோடி ரூபாயில் ஒரு ஆய்வு செய்யப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இது சம்பந்தப்பட்டவர்களும் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றையதினம் இது சம்பந்தமாக ஆய்வு செய்துகொண்டு மட்டுமே இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே இதை விரைவில் முடிப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று விரைவில் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கூவம் ஆற்றைச் சீரமைக்க அரசு மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள்.

273—(*வினா எண் 18626) —

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :
திரு. வி. வி. சுவாமிநாதன் :
திரு. கே. ஆர். கணபதி :
திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :
திரு. என். எஸ். வி. சித்தன் :

1984 மார்ச் 12]

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உள்ள கூவம் ஆற்றில் சாக்கடை கலப்பதைத் தடுக்கவும், நாற்றத்தைப் போக்கவும் அரசு மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) 1970-1975 ஆம் ஆண்டு அதைச் சீரமைக்கப் போடப்பட்ட திட்டத்தின் விளைவுகளை அரசு பரிசீலித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ), (ஆ) மற்றும் (இ) விவர அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட் : விவர அறிக்கையிலே இரண்டாம் நிலையில் படகுத்துறை, சிற்றுண்டிச்சாலை, மாற்றுப் பாதை ஒழுங்கு படுத்துதல் போன்றவைகளுக்காக ரூ. 108 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 141 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. படகுத்துறை இப்போது செவ்வனே நடைபெறுகிறதா? இதிலே யார் யார் பயணம் செய்கிறார்கள்? இந்தியர் அதிகமாக பயணம் செய்கிறார்களா? வெளிநாட்டவர்கள் அதிகமாக பயணம் செய்கிறார்களா? இதிலிருந்து அரசுக்கு கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு ?

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகு துறைகள் எல்லாம் ஒன்றும் இப்போது செயல்பட வில்லை. எனவே மற்ற கேள்விகளுக்கு இடம் இல்லை. நாம் இப்போது முக்கியமாக செய்யவேண்டியது கூவத்தில் நாற்றம் அடிக்காமல் இருப்பதற்கு முகத் துவாரத்தில் மண் மேடிட்டுக் கொண்டு கூவத்தின் தண்ணீர் கடலில் கலக்காமல் செய்வதற்கு அந்த மண்ணை எடுப்பதற்கு இப்போது வேலைகளை செய்து விட்டாலும், பிறகு கூவத்தில் மற்ற இடங்களில் கலக்கிற சாக்கடைத் தண்ணீரை தடுத்துவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி படகுகளில் போகலாம். என்னென்ன செய்திருக்கிறோம் என்று முதல் பக்கத்தில் கொடுத்திருக்கிறோம். எனவே, படகுகளில் இப்போது போவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

---

* 360–365-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படகுகள் இப்போது போவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள். சிலநேரங்களில் அங்கே படகுகள் சென்று கொண்டிருக்கின்றன. அதற்கு துடுப்புகளை உபயோகப்படுத்துவதன் காரணமாக கூவம் நதியினுடைய துர்நாற்றம் அதிகமாகி இருக்கிறது. ஆகவே, நிரந்தரமாக அந்த இடத்தில் படகுகள் செல்லாமல் இருப்பதற்கு அரசு தடை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி கவனிக்கப்படும்.

வளசரவாக்கம் பேரூராட்சிப் பகுதிக்கான நிரந்தரக் குடிநீர்த் திட்டம்.

274—(*வினா எண். 19277)—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம் வளசரவாக்கம் பேரூராட்சிக்கு நிரந்தரக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் கொணரும் திட்டத்தில் வளசரவாக்கம் பேரூராட்சியும் இடம் பெறுகிறது.

குடிநீர்த் திட்டங்களுக்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை.

275—(*வினா எண். 19834)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் குடிநீர்த் திட்டம் செயல்பட எவ்வளவு தொகை 1983 மார்ச் முடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது?